அ.வ.எண். 2/2019 நாள்: 25.06.2026

வா.சா.1 திரு.தமிழரசன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1–ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4) 1–ம் வாதி எங்க வேலை பார்த்தார் என்றால் தென்னக ரயில்வேயில் வேலை பார்த்தார். அவர் எப்போது ஓய்வு பெற்றார் என்றால் 31.07.1989 ஆகும். 1–ம் வாதி ரயில்வே துறையில் வேலை பார்த்ததால் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் இலவச பயண பாஸ் வழங்கப்பட்டிருக்கும் என்றால் பணியாளருக்கும் அவரது உதவியாளருக்கும் வழங்கப்படுவது உண்டு. அவரது உறவினர்க்கோ குழந்தைகளுக்கோ பாஸ் வழங்கப்படுகிறதா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1–ம் வாதிக்கு வழங்கப்பட்ட ரயில்வே பயண பாஸ்தானா என்றால் அந்த ஆவணத்தில் பாலகிருஷ்ணன் பெயர் உள்ளது அது தற்காலிகமாக வழங்கப்பட்டது என உள்ளது. மேற்படி 1–ம் வாதி பாலகிருஷ்ணனுக்கு ரயில்வே துறையில் வழங்கப்பட்ட பயண பாஸில் ஒரே மகன் என்று 1–ம் பிரதிவாதியை குறிப்பிட்டுள்ளது என்றால் அது பற்றி என்னால் எதுவும் கூற முடியாது. அதேபோல் 1–ம் வாதியின் பணி ஓய்வு அடையாள அட்டையில் 1–ம் பிரதிவாதியை மகன் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) 1–ம் பிரதிவாதி பிறந்தவுடன் ஒரு சில வருடங்களிலே அவரது தாயார் சரோஜா வேறு ஒரு நபருடன் சென்று விட்டார் என்றால் சரியல்ல, 5 வருடங்கள் வரை அதே வீட்டில் இருந்தார் செவிலியர் படிப்பு முடித்து பணிக்கு சென்ற போது வேறு ஒரு திருமணம் செய்து கொண்டார். 1–ம் பிரதிவாதி பிறந்த ஒரு சில வருடத்திற்குள் சரோஜா வேறு ஒரு நபருடன் சென்று விட்டதால் 1–ம் பிரதிவாதியை தனது மகன் போல் 1–ம் வாதி வளர்த்து வந்தார் என்றால் சரியல்ல. 1–ம் வாதி எந்த தேதியில் உயில் எழுதிவைத்தார் என்றால் 05.12.2018 ல் எழுதிவைத்தார். அந்த உயில் ஆவணத்தில் 3 வது பத்தியில் எனக்கு 2 தம்பிகள் 1.தெய்வத்திரு.நித்தியானந்தம் 2. முத்தமிழன் உண்டு. மேற்படி நித்தியானந்தம் சரோஜா திருமணம் நடைபெற்று 6 மாதத்தில் அவர் இறந்து விட்டார். அப்போது சரோஜா 6 மாத கர்ப்பிணி அவர்களுக்கு பிறந்த குழந்தை சத்யநாராயணன் ஒரு சில வருடங்களில் சரோஜா வேறுஒருவருடன் சென்று விட்டார். தனித்து விடப்பட்ட சத்யநாராயணன் எங்கள் வீட்டிலேயே வளர்ந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சரோஜா 5 வருடங்கள் நித்யானந்தம் வீட்டில் வசித்து இருக்கவில்லை என்றால் சரியல்ல.

6) அ.வ.எண்.2/2019–ல் எந்த ஆவணம் செல்லாது என்று கோருகிறேன் என்றால் 1–ம் பிரதிவாதி அவரது மனைவியை காப்பாளராக காட்டி அவரது மகன்களுக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் செல்லாது என்று கோருகிறேன். அந்த செட்டில்மென்ட் ஆவணத்தில் கண்ட சொத்து எது என்றால் வயல்

ஆகும். அந்த வயல் முழுவதையும் எழுதிவைத்து விட்டாரா என்றால் சரிபாதியை எழுதிவைத்தார். மற்றொரு பாதி வயல் என்னனாது என்றால் பாலகிருஷ்ணன் மருத்துவமனையில் இருக்கும்போது விற்பனை செய்து விட்டார். யாருக்கு விற்பனை செய்தார் என்றால் அவர் மருத்துவமனையில் இருக்கும்போது அவரை அவரது குடும்பத்தார் புறக்கணித்து விட்டதால் அவருடன் ரயில்வே துறையில் பணிபுரிந்த நண்பர் ஒருவர் மூலம் பாலமுருகன் என்பவருக்கு கிரையம் செய்துவிட்டார். மேற்படி சொத்து வசந்தா பெயரில் உள்ள சொத்து என்றால் சரிதான்.

7) வசந்தா பெயரில் மேற்படி சொத்து இருந்ததால் அவரது வாரிசு பாலகிருஷ்ணன் (கணவர்), சத்யநாராயணன் (மகன்) என்று வாரிசு சான்றிதழ் பெற்று அதனடிப்படையில் பாலமுருகனுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அந்த வாரிசு சான்றிதழ் செல்லாது என்பதால் வழக்கு உள்ளது. மேற்படி வாரிசு சான்றிதழ் அடிப்படையில்தான் 1–ம் பிரதிவாதி தனது மகன்களுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் மோசடியாக எழுதப்பட்டுள்ளது. 06.09.2018 நாளிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எண்.1026/2018 மற்றும் 15.05.2022 நாளிட்ட கிரையம் ஆவணம் ஆகியன மேற்படி வாரிசு சான்றிதழ் அடிப்படையில் எழுதப்பட்டு பதிவு செய்யப்பபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழ் தவறு என்றுதான் வழக்கு. மேற்படி வாரிசு சான்றிதழ் பொய் என்றால் பாலகிருஷ்ணன் பாலமுருகனுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமும் செல்லாது என்றால் வாரிசு சான்றிதழ் அடிப்படையில் கிரையம் செய்யவில்லை. அவர் அவருக்குண்டான பாகத்தை விற்பதாகத்தான் குறிப்பிட்டுள்ளார். மேற்படி கிரையம் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. கேள்விப்பட்டதுதான்.

8) மேற்படி 15.05.2022 நாளிட்டு பாலகிருஷ்ணன் பாலமுருகனுக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தில் நான் 1வது சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் சொத்தை அபகரிக்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த பாலகிருஷ்ணனுக்கு வாரிசு என்று விளம்புகை செய்யக்கேட்டு தனியாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அந்த வழக்கு எண். அ.வ.எண். 187/2022 ஆகும். அந்த வழக்கில் யார் யாரை வாரிசாக அறிவிக்க கேட்டுள்ளேன் என்றால் 1. எஸ்.தமிழரசன் 2. எஸ்.அன்பழகன் 3. ஆர். மணிவண்ணன் ஆகியோர்களை வாரிசுகளாக அறிவிக்கக்கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு பூதலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தோமா என்றால் ஆமாம், உயில் அடிப்படையில் 2–ம் நிலை வாரிசுகளாக அறிவிக்கக்கேட்டுள்ளோம்.

9) சத்யநாராயணனும், பாலகிருஷ்ணனுக்கு வாரிசு எனக்கேட்டு பூதலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும், அந்த மனு நிராகரிக்கப்பட்டது. பாலகிருஷ்ணனுக்கு எனது அக்கா மட்டுமே மனைவி என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி சத்யநாராயணன் இறந்த பாலகிருஷ்ணனுக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு கொடுத்த மனுவில் நான் கிராம நிர்வாக அலுவலரை சரிகட்டி பாலகிருஷ்ணனுக்கு 2 மனைவிகள் என்று சொன்னதால் வாரிசு சான்றிதழ் கேட்ட விண்ணப்பம் திருப்பப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி சத்யநாராயணனுக்கு தாய் தகப்பன் இல்லாததால் சிறு வயதிலிருந்து தன்மகன்போல் பாலகிருஷ்ணனும் அவரது மனைவி வசந்தாவும் வளர்த்து வந்தார்கள் என்றால் தகப்பன் மட்டுமே இல்லை தாய் தற்போது வரை இருக்கிறார். வசந்தா வேறுஒரு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும், அந்த வழக்கு விவரம் தெரியாது.

10) 1–ம் பிரதிவாதி சத்யநாராயணனுக்கு பாலகிருஷ்ணன் தகப்பனார் என்று அனைத்து கல்விச்சான்றிதழ், அடையாள அட்டைகள், திருமண அழைப்பிதழ், ரயில்வேதுறை வழங்கிய பாஸ் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாலகிருஷ்ணனுக்கு மனைவி வசந்தா ஆவார். 1–ம் பிரதிவாதி சத்யநாராயணனை பாலகிருஷ்ணன் தத்தெடுக்கவில்லை மற்றும் இயற்கையான பெற்றோரும் அல்ல. 1–ம் வாதி பாலகிருஷ்ணன் குடும்ப அட்டையில் 1–ம் பிரதிவாதியின் பெயர் மகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் உடல்நலம் சரியில்லாமல் இருந்த சமயம் அவரது சொத்துக்களை அபகரிக்க உயில் எழுதிவாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

S.d/ Tamilarasan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:28:30 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU